# தென்றல்

ஆரம்பம் : 06.04.2008 பதிவு இலக்கம் : 361910

காற்று : 14 சுகந்தம் : 51 (ஐப்பசி - மார்கழி) - 2021



200/=

கவிதாயினி கஜந்தினி யுவராஜா

தேசிய பல்சுவைக் குடும்ப சஞ்சிகை !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மாநகரில் புதுப் பொலிவுடன் லோட்டஸ் மஹால் தங்குமிடம்!

## (LOTUS MAHAL LODG)

**நாளாந்தம்/வாராந்தம்/மாதாந்தம் என AC/NON AC வசதிகளுடன்விற்பனைப் பிரதிநிதிகளுக்கு உகந்ததாக நியாயமான விலையில் வசதியான அறைகள் வாடகைக்குப் பெற இன்றே நாடுங்கள்.**

**இல-61/2, யாட் வீதி,**
**கல்முனை.**



தொலைபேசி:- 0770165133/ 0760824059



Email:- *kanthaswamy @gmail.com*
*Free email accounts/Register today at mail.com*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பம் : 06.04.2008

# தென்றல்
# THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
தொ.பே : 077 – 6983597
பெக்ஸ் :065 – 2227542
Emaill: kirupabatticaloa@yahoo.com
இணையம் : www.thendralbook.com

ஆசிரியர் / வெளியீட்டாளர்
க. கிருபாகரன்

ஆசிரியர் குழு
கலாபூஷணம் மு. தம்பிப்பிள்ளை
கலாபூஷணம் இ. கோபாலபிள்ளை
திருமதி. கவிதா கிருபாகரன்
கலாபூஷணம் ஆ. அரசரெத்தினம்
செல்வி. த. செல்வராணி

ஓவியம்
சி. புரவர்த்தனி

ஆக்கங்களுக்கு ஆக்கியோரை பொறுப்பாளிகளாவர். (ஆ – ர்)

## உள்ளே....


- ஆசிரியர் கருத்து
  - கிறிஸ்மஸ் மனநிறைவைத் தரட்டும்! – 2
- தென்றலின் தேடல்
  - கவிதாயினி கஜந்தினி யுவராஜா – 3
- சிறுகதைகள்
  1. பாதை தவறிய.. – 8
  2. புதிதாய்ப் பிறந்தாள்! – 26
  3. சபலம்யன்றி! – 32
- கட்டுரைகள்
  1. சிற்றிதழ்கள் மாறுபட்ட வாசிப்பு! – 20
  2. அழிவின் விளிம்பில் சுறா! – 39
  3. நம் கோபத்தால் பாதிக்கப்படும் நாம்! – 42
- கவிதைகள்
  1. என்ன மனிதன் இவன்? – 7
  2. ஒன்றுமில்லை! – 19
  3. ஐம்பெரும் மகத்துவமே! – 25
  4. இறைவனை வேண்டுவோம்! – 30
  5. ஆட்டங்கள் அடங்கியதோ! – 31
  6. நாகரீக கலாசாரம்! – 38
  7. உயிரைப் பறித்துப் போறவளே! – 41
  8. வாழ்த்துகிறேன்! – 45
- புதிய வரவு – 46
- நீத்தார் நினைவு – 47
- வாசகர் நெஞ்சம் – 48




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் மனநிறைவைத் தரட்டும்!

உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்கள் **"கிறிஸ்மஸ்"**– கொண்டாடுகின்ற மாதமாக மார்கழி மாதம் அமைந்துள்ளது.

இயேசு கிறிஸ்து பாவிகளுக்காக மரித்தார். **"சிலுவை"**– களைச் சுமப்பதே மனிதப் பிறவியின் மகோன்னதமான செயற்பாடாகும் என்பதே இயேசுவின் வாழ்க்கை தரும் செய்தியாகும்.

அரசியல் என்றாலும் சரி, ஆன்மீகம் என்றாலும் சரி, கலை– இலக்கியச் செயற்பாடுகள் என்றாலும் சரி அவை அத்தனையும் மக்களை– சமூகத்தை மையப்படுத்தியதாக அமைந்தால் மாத்திரமே அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் அறுவடை மக்களை முழுமையாகச் சென்றடையும். மாறாக அச்செயற்பாடுகள் தனிமனிதனை மையப்படுத்தியதாகக் காணப்படுமானால் அதன் விளைவு அழிவும், அவமானமும் தான். இதுதான் வரலாறு எமக்குப் புகட்டிய பாடம். நடைமுறையில் ஒவ்வொருவரும் இயேசுவாக, புத்தராக, காந்தியாக வாழ முடியாவிட்டாலும், அவர்களது வாழ்க்கை தரும் செய்தியினைப் புரிந்து– உணர்ந்து அவற்றின் வழியில் நடக்க முயல்வோமானால் உலகில் சாந்தியையும், சமாதானத்தையும் தேடி அலைய வேண்டியதில்லை. எமது அன்றாட வாழ்வில் இல்லாமையில் இருக்கின்ற ஒருவருக்கு துணை செய்வோம். அநீதிக்கு ஆளான ஒருவருக்குக் குரல் கொடுத்து, நீதியைப் பெற்றுக் கொடுப்போம்!

அவ்வாறு நாம் ஒவ்வொருவரும் செயற்படுகின்ற போது உள்ளத்தில் ஏற்படுகின்ற அந்த தூய்மையான உணர்வே இயேசு சொல்லும் அமைதி என்பதை உணர்ந்து அனைவரும் செயற்பட இவ்வேளையில் திடசங்கற்பம் பூணுவோமாக!

என்றென்றும் அன்புடன்

ஆசிரியர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்றலின் தேடல்

- க. கிருபாகரன் -



## கவிதாயினி கஜந்தினி யுவராஜா



திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்ட செல்லக்குட்டி ஐயா- ஜானகிதேவி தம்பதியினருக்கு மூத்த மகளாகப் பிறந்தவர் கவிதாயினி கஜந்தினி யுவராஜா. பெற்றோர்கள் இருவரும் கலைத் துறையில் சிறந்து விளங்கி, மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றவர்கள். அவர்களது வழித்தோன்றலில் கஜந்தினியும் ஓர் எழுத்தாளராக, கலைஞராக, பாடசாலை அதிபராக எனப் பன்முக ஆளுமையுடன் இத்தரணியில் வலம் வருகிறார். இத்தகைய ஆளுமையைத் **"தென்றலின் தேடல்"**- வாயிலாக வெளிக் கொணர்வதில் **"தென்றல்"**- பெருமையும், பேருவகையும் அடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியப் பயணம்

இவர் இலக்கியத்தின்பால் ஈர்ப்புக் கொண்டு பல்வேறு படைப்புக்கள், ஆக்கங்களை வெளியிட்டு வாசகர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றவராக காணப்படுகிறார். அத்தோடு சம்பூர் பிரதேசத்தின் முதலாவது பெண் எழுத்தாளர் என்ற பெருமைக்குரியவராகவும் திகழ்கிறார்

பல்துறை ஆளுமைமிக்க **"சம்பூரணி"**– கஜந்தினி யுவராஜாவின் படைப்பாக்கங்கள் மண்வாசனை, தமிழ் உணர்வு மற்றும் புதுமை நிறைந்ததாக அமைந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

கல்வி கற்கும் காலத்திலிருந்தே கட்டுரை, பேச்சு, விளையாட்டு, நடனம், பாடல், கவிதை, வில்லுப் பாட்டு, சிறுகதைப் போட்டிகளில் பங்குபற்றி, வெற்றி பெற்றுள்ள இவருக்கு 500ற்கும் மேற்பட்ட சான்றிதழ்கள், 9 விருதுகள் கிடைத்துள்ளமை இவரது கலை, இலக்கியப் பங்களிப்பைப் பறைசாற்றுவனவாக உள்ளது.

## பெற்ற விருதுகள், பரிசில்கள்

- ஆசிரியர் தினத்தை ஒட்டி வலய மட்டத்தில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் இரண்டாம் இடம்.
- பிரதேச இலக்கிய விழாவில் கவிதைப் போட்டியில் இரண்டாம் இடம்.
- அத்தோடு பாடலாக்கப் போட்டியில் முதலாம் இடம் பெற்றமைக்காக வழங்கப்பட்ட **"விருது"**.
- **"புகைப்படப் போட்டி நுட்ப விருது"**.
- பிரான்ஸ் மனித உரிமைகள் சங்க இலக்கியப் பூந்தோட்டம் வழங்கிய **"யாழ்.நூலக கவிதை விருது"**.
- தேடல் கலை இலக்கிய அமைப்பு வழங்கிய **"கலையருவி விருது"**.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **"நட்சத்திரக் கவி விருது", "மண்மணக் கவிஞர் விருது".** (இந்தியா)
- இலங்கை இலக்கியத்துறை மகளிர் தினத்தை ஒட்டி வழங்கிய **"பைந்தமிழ் பா மணி விருது".**
- **"கவி மின்னல் விருது", "கவிச் சூரியன் விருது"**– (இந்தியா)

## இவரது ஆக்கங்கள் வெளியான ஊடகங்கள்

### பத்திரிகைகள்

- தினகரன் வாரமலர்
- தமிழன்
- மெட்ரோ நியூஸ்

### சஞ்சிகைகள்

- கொட்டியாரம் - அனாமிகா வெளியீடு (லண்டன்)
- யாழ். நூலக எரிப்பு (மனித உரிமைகள் சங்கம், பிரான்ஸ்)
- கார்த்திகை சஞ்சிகை
- நீங்களும் எழுதலாம் சஞ்சிகை
- தேடல் கலை இலக்கியச் சஞ்சிகை
- உதயம் சஞ்சிகை
- மணிவிழா மலர் (கல்வி வலயம், திருகோணமலை)
- தரளம் (சாகித்திய விழா மலர், திருகோணமலை)
- நித்திலம் சஞ்சிகை (கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்)
- நுட்பம் விழா மலர் (மட்டக்களப்பு)

## எழுதி வெளியிட்ட நூல்

- சேவலின் விடியல்

## பதவி வகித்த, பதவி வகிக்கும் அமைப்புக்கள்

- உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் இலங்கைக் கிளையின் நிர்வாக உறுப்பினர்.
- இணையவழிக் குழும நிர்வாக உறுப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் ஆற்றல்மிக்க மூத்த படைப்பாளிகள் பலரை எமது இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். ஈழத்து இலக்கிய-சஞ்சிகை-இசை-நாடக-நாட்டிய-கிராமிய வைத்தியத் துறைக்குப் பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு அறிமுகஞ் செய்யும் வகையிலேயே "தென்றலின் தேடல்"- எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



இவ்வாறாக அதிபராக, எழுத்தாளராக, கலைஞராக எனப் பல்வேறு பரிமாணங்களில் தனது அதீத ஆற்றலை இத்தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்கி வரும் திருமதி கஜந்தினி யுவராஜாவின் இலக்கியப் பணி எதுவித தங்கு தடையுமின்றி முன்கொண்டு செல்லப்பட வேண்டும். அத்தோடு இவரால் எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள நூல் முழுப் பிரசவமாக வெளிவரத் **"தென்றல்"**- மனம் திறந்து வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கவிதை -

# என்ன மனிதன் இவன்?



– கோவிலூர் செல்வராஜன், லண்டன் –

செல்வத்தைச் சம்பாதிப்பதற்காக
ஆரோக்கியத்தை இழக்கின்றான்
பின்பு ஆரோக்கியத்தை மீட்க
செல்வத்தை அழிக்கின்றான்
எதிர்காலத்தை மனதில் வைத்து
நிகழ்காலத்தை வீணாக்குகின்றான்
பின்பு எதிர்காலத்தில் தன் கடந்த
காலத்தை நினைத்து வருந்துகின்றான்
மரணிக்கவே போவதில்லை!
என்பது போல் வாழ்கின்றான்
உலகில் அவ்வப்போது நடக்கும்
பிரளயங்கள் பற்றி அவன் அறியமாட்டானா?
ஜலப்பிரளயம், அக்கினிப் பிரளயம்
மாருதப் பிரளயம், யுத்தப் பிரளயம்
கிருமிப் பிரளயம் ஆகிய பிரளயங்கள்
நடந்துள்ளன! நடக்கின்றன!!
இப்போது நடக்கும் இந்தக் கிருமிப் பிரளயம்
மனிதனின் வாழ்வைக் கேள்விக்குறியாக்கியுள்ளது
இதை இவன் இன்னும் உணராமல் இருக்கின்றான்
என்ன மனிதன் இவன்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– சிறுகதை –

# பாதை தவறிய...!



–நடராசா பார்த்தீபன், வவுனியா–

**“நான் இனிமேல் இங்கே இருக்கமாட்டேன்”**– பிடிவாதத்துடன் கூறுகிறான் .என்ன செய்வதென்றே தெரிய வில்லை. இடிவிழுந்தது போல் மகன் சொல்வதைக் கேட்டு, அழுகி றாள். இந்த இடி இருபது வருடங்களுக்கு முன்னர் அவள் தலையில் விழுந்தது.

**“அருண் நான் சொல்வதைக் கேளப்பு.. எனக்கும் உன்னை விட்டால், யார் இருக்கிறார்கள். நான் யாருக்காக வாழ்கிறேன். நான் தேடிய பணம், சொத்து எல்லாமே வீணாப் போய் விடும்”**– அழுதபடி மகனைக் கெஞ்சுகிறாள்.

**“உங்களுடைய சொத்து, காசு, நகை.. ஒரு நிமிஷமும் இந்த ஊர்ல என்னால வாழ முடியாமல் செய்து போட்டு.. யாருக்கு வேணும்?”**– அவன் கோபத்தில் நியாயம் இருப்பதை உணர்ந்து கொண்டா லும், மனம் மகனைப் பிரிய முடியாமல் தவிக்கிறது.

**“ஏதோ ஒரு நாட்டுக்குக் கண்காணாத இடத்துக்குப் போனால்தான் என்மனம் ஆறும். அதுவும் உங்கட பணத்தில் போகக் கூடாது. எப்படியாவது– எங்கேயாவது கடன் வாங்கியாவது நான் போய்விட வேண்டும். வேண்டாம் இந்த ஊர்..”.**

**“ஊர்ல இருக்க வேண்டாம். கொழும்பு அல்லது கண்டிக்குப் போயிருப்போம். இல்லையெனில் இந்தியாவுக்குப் போவோம்”.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"என்ன போவோம். நான் தனியாப் போறேன். உங்களோட எனக்கு இருக்க விருப்பமில்லை. உங்களோட ஒட்டும் வேண்டாம்.. உறவும் வேண்டாம்..**

பேசப் பேசக் கோபம் கூடிக் கொண்டே தான் போகும். ஆனால், பேசாமலிருக்கவும் தேவகிக்கு முடியாது. பெற்ற மனம் துடிக்கிறது. பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளை தூக்கி எறிந்து பேசுகையில் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தன் பாசத்தைப் புரியாமல் போகிறேன் என்கிறானே..

தன் தந்தை -தாயிடம் சொல்லி அவனைத் தடுக்க முடியுமா? தன்னையே தூக்கி எறிந்து, மதிக்காமல் பேசுகிறவன் அவர்களை.. அவர்களை அவமதிக்கும் நிலை.. இந்த வயதான காலத்தில் அவர்களை ஏன் கவலைக்குள்ளாக்க வேண்டுமென ஒரு கணம் நினைக்கிறாள்.

தன் பெற்றோருக்கும் தெரிந்திருக்குமோ.. தெரிந்தும் அவர்களும் தாயாச்சு- மகனாச்சு என்று கண்டும் காணாதது போல் இருக்கிறார்களோ.. அல்லது இதற்கெல்லாம் தாங்கள் தான் காரணம் என நினைக்கிறார்களோ.. தங்கள் கையாலாகாத நிலைதான் என்று எண்ணிக் கலங்குகிறார்களோ.. இருபது வருடங்களுக்கு முன் கலங்கிய அவர்களுக்கு இந்தக் கலக்கம் பெரிதாகத் தோன்ற வில்லையோ.. இல்லை, பழகிப் போச்சோ..

ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்? ஒரு நாளா, இரண்டு நாளா, ஒரு வருடமா, இரண்டு வருடமா இருபது வருடங்களாகக் கலங்கிக் கலங்கி என்ன வாழ்க்கை இது? தீதும் நன்றும் பிறர்தர வாரா என்பதனைப் புரிந்து கொள்ள எனக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? காலத்தைப் பழி சொல்வதா? கிரகத்தைக் குறை கூறுவதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**"என்கதை அப்போதே தெரிந்திருந்தாலே கர்ப்பத்தில் நானே கலைந்திருப்பேனே.."**- அந்தப் பாடல் வரிகள் கூட. எனக்குப் பொருத்தம் இல்லாமல் போய் விட்டதே..!

எவ்வளவு காலம்தான் அழுவது? அழுவதற்கென்றே பிறந்த அவலையா நான்?

அன்று என் உயிரை மாய்த்திருந்தால். இவ்வளவு சீரழிவும்.. கேவலமும்.. அவலமும்.. இல்லாமல் போயிருக்குமே.. அது என்னைத் தடுத்தது. மகனே! நீ தானடா.. உன்னால் தானடா..

அம்மா நோயாளி. அப்பாவின் வருமானம் போதவில்லை. மேற்கொண்டு படிக்க முடியாத சூழ்நிலை. நான் வேலைக்குப் போகிறேன்- எனத் தீர்மானம் எடுத்த போது தாய்- தந்தைக்கும் அது சரியெனப்பட்டது.

வவுனியாவிலுள்ள ஆடைத் தொழிற்சாலைக்குப் போய் மாதம் பத்தாயிரம் ரூபாய் கொண்டு வந்தபோது. அக்குடும்பத்திற்கு அது பெரிய உதவியாகியது. வேலையும் அவ்வளவு கஷ்டம் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுதேவகி சொன்ன போது பெற்றோருக்குப் பெரிய ஆறுதலாயிருந்தது.

காலை ஏழு மணிக்குப் போய் மாலை ஏழு மணிவரை வெற்றிலைக் கடையில் வேலை செய்ததில் ஆறாயிரம் ரூபா கூட. உழைக்க முடியாத நிலையில்- தாயின் சுகவீனமும், மருந்து மாத்திரைச் செலவீனங்களும் கட்டுக்கடங்காமல் போனதோடு மூப்பும் சேந்து களைத்துப் போன தந்தைக்கு ஓய்வு கொடுக்கத் தேவகி நினைத்தாள்.

ஆறுமாத காலம் ஆடைத் தொழிற்சாலை வேலை. நிறைய நண்பிகளைப் பெற அவளுக்கு வாய்ப்பாகியது. அதிலொருத்தி பாத்திமா.

ஒரு நாள் **"தேவகி, நான் சவூதிக்குப் போகப் போகிறேன்"**- என்று பாத்திமா சொன்ன போது, தேவகி இதை எதிர்பார்க்க வில்லை. அதற்கான முயற்சிகளில் பாத்திமா இறங்கிய போது ஏதோ கேட்டு வைப்போம் என்ற வகையில் எல்லாவற்றையும் கேட்டு வைத்தாள். சவூதி போவதற்கான சில சடங்குகளும், கஷ்டங்களும் இருந்தாலும் மாதம் ஐம்பதாயிரம் சம்பளம் என்பது சலனப்பட வைத்தது. ஒரு இரண்டு வருடங்கள் என்றாலும் உழைத்துக் கொண்டு வந்து விடலாம் என்ற நினைப்பு பூதாகரமாக வளரத் தொடங்கியது.

அயலவர்களின் வசதி வாய்ப்புக்கள் அடிக்கடி கண்ணைக் குத்தின. எப்படியாவது பெற்றோரைச் சம்மதிக்கச் செய்ய வேண்டும். ஐரோப்பிய நாடுகளுக்குப் போவதென்றால்தான் அதிக பணம் வேண்டும். அரேபிய நாட்டுக்குப் போவதற்கு அவ்வளவு தேவைப்படாது என்பதும், அத்தோடு வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜென்சிகள் போட்டி போட்டுக் கொண்டு நிறையச் சலுகைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதி வாய்ப்புக்களைச் செய்கிறார்கள் என்றும் ஆடைத் தொழிற் சாலையில் பலரும் கதைப்பதைக் கேட்டிருக்கிறாள். எதற்கும் பாத்திமாவுடன் கதைத்தால், எல்லா ஒழுங்குகளையும் அவள் கவனிப்பாள் என்ற நம்பிக்கையும் அவளுக்குச் சவூதி போவதற்கு ஆசைத் தீயாகப் பரவக் காரணமானது.

அவள் முதலாம் திகதி பிறந்தவள். சரியான பிடிவாதக்காரி. தான் நினைத்ததை எப்படியும் செய்து முடிப்பாள். அயலில் உள்ளவர்கள் கேட்டதற்கு தேவகியின் பெற்றோர் கொடுக்கும் பதில் இது. **"நான் போறேன். போய் உழைத்துக் கொண்டு வாறன்"**– என்று தேவகி சொன்ன போது, பெற்றோர்களும், வேறு தெரிந்தவர்களும் இப்போது **"பொம்பிளைப் பிள்ளைகள் போய்த்தான் வாறார்கள்"**– என்று சொல்லவும் அதற்கென்ன அவள் போய் வரட்டும்! எனப் பெற்றோர் சம்மதித்துக் கொண்டனர்.

தன் மனைவியின் நோயும், தன் உழைப்பின் போதாமையும் தந்தையை ஒருகணம் தடுமாற வைத்தது. ஒரு கல்யாணத்தைக் கட்டி, அவளை ஊரோடு வைத்திருக்க விருப்பம். இருந்தும் தேவகியின் எதிர்பார்ப்புக்கேற்ப மாப்பிள்ளையைத் தேடிக் கொள்வதில் உள்ள சிக்கல்களை அவர் மனைவியிடம் சொல்லிச் சொல்லி தாயும் அரைகுறை மனதோடு சம்மதித்து விட்டாள்.

தேவகி சவூதிக்கு வேலைக்குச் சென்ற வீடு அவளுக்கு ஓரளவு பிடித்துக் கொண்டது. வயதான, தன் தாயின் வயதையொத்த நோயாளியான குடும்பத் தலைவியைப் பராமரிக்கின்ற வேலை யென்றபடியால், விருப்பத்துடன் பணியாற்றிக் கொண்டிருந்தாள்.

நான்கு பிள்ளைகள். மூத்த ஆண் பிள்ளைகள் மூவரும் திருமணம் செய்து தங்களுக்கான வீடுகளுக்குச் சென்று விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்கிடை தாயாரை வந்து பார்த்து, நலம் விசாரித்துச் செல் வார்கள். வசதி வாய்ப்புக்களுக்கு எந்தக் குறையும் இல்லாத வாழ்க்கை அவர்களுடையது.

இளைய மகன் மட்டும் தொழில் துறை ஒன்றையும் தொடங்காது, திருமணம் தொடர்பான சிந்தனைகளுமில்லாது பொறுப்பில்லாத வாழ்க்கை வாழ்வதும், தந்தையின் சொத்துக்களை நான்காகப் பிரித்தெடுத்து நான்காவது மகன் நாசமாக்கிக் கொள்வதும், அண்ணன்மார்களுக்கு அவ்வளவு பிடித்தமானதாக இருக்கவில்லை. வீட்டுக்கு வரும் வேளைகளில் எல்லாம் தம்பியின் பொறுப்பற்ற போக்குத் தொடர்பாகத் தாயிடம் முறையிடுவதும், சில வேளைகளில் நேரிலேயே தரக் குறைவாகப் பேசுவதும் எனச் சில நாட்கள் நகர்ந்தன.

தன் கணவன் இருந்திருந்தால், இளைய மகனையும் ஒரு தொழில் துறையில் ஈடுபடுத்தி, மற்றயவர்களுக்குக் கிடைத்த வாழ்க்கையைப் பெற்றுக் கொடுத்திருப்பார் என்றும், இளைய மகனுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றும், அவர்கள் மூவரும் தாங்கள் உண்டு- தங்கள் குடும்பம் உண்டு- என ஒதுங்கிக் கொண்டதாகவும், இவன் இப்படிப் பொறுப்பில்லாமல் போய்விட்டான் என்றும், அந்தக் கவலைதான் தன்னை நோயாளியாக்கி விட்டதாகவும், அந்தத் தாய் தேவகியிடம் சொல்லி அழுவாள். அவளுடைய அழுகையை நிறுத்தக், கவலையைக் குறைக்கத் தேவகி அந்தத் தாயின் மேல் அதிக பாசத்தையும், அக்கறையையும் காட்டினாள்.

சில வேளைகளில் இளைய மகன் வரும் போது அவனுக்கு உணவு பரிமாறுவதற்கு, அவனுடைய ஆடைகளைத் தோய்த்து, அயர்ன் பண்ணிக் கொடுப்பதற்கும் தாய் சொல்லும் போது தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்குத்தானே வந்தநான் என்று நினைத்துக் கொண்டவளாய் தேவகி செய்வாள். தன்னுடைய கவனிப்பு, வேலை நேர்த்தி அவனுக்கும் பிடித்து, தேவகி மேல் அக்கறை காட்ட அவனும் தொடங்கினான்.

குடும்ப விபரங்கள், வீட்டில் செய்த வேலை, திருமணமாகவில்லை போன்ற விடயங்களை எல்லாம் கேட்டறிவான்.

தேவகியின் வயதும், தனிமையும் அவனது சில அத்துமீறல்களை ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு அவளைத் தள்ளியது. அவனது தாயும் மகனின் அண்மைய மாற்றங்களைக் கண்டும் காணாதது போல் இருந்து விடுவாள்.

காதல் எப்போது வரும்.. யாரிடம் வரும்.. என்று யாரால் கூற முடியும்? ஒருவகையில் தேவகியும், அவனும் காதலர்கள் போல் உல்லாசம், உற்சாகம் என இருப்பது அந்த வீட்டுக்குள் இருக்கும் மூவருக்கு மட்டும் பரகசியம். இடைக்கிடை வந்து போகும் அண்ணன்மார் அவனுக்கான திருமணப் பேச்சுக்களை எடுப்பதும், அவன் மறுப்பதும், தாய் அழுவதும் என வெளியே தெரியாமல் ஒரு எரிமலை போல் வீட்டுக்குள் குமுறிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் அண்ணனிடம் அவன் தேவகியைத் தான் திருமணம் செய்யப் போகிறேன் என்றும், அவளை இஸ்லாத்துக்கு மாற்றப் போகிறேன் என்றும் கூறி விட்டான். தாயும் அவனைப் புரிந்து கொண்டாள். அவள் தனக்கும் அது விருப்பம் என்று தெரிவித்து விட்டாள்.

உலகெங்கும் எத்தனை ஏற்றத் தாழ்வுகள்.. இனம், மொழி, பிரதேசம், வர்க்கம்.. இங்கேயும் ஒரு வித ஏற்றத்தாழ்வு!

இந்த நெருக்கு வாரங்களுக்கு இடையில் மாட்டிக் கொண்டேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நினைக்கும் போது தான் தான் விட்டு விலக முடியாத பாதகமான நிலைமைக்குள் தள்ளப்பட்டு விட்டதை அவள் உணரத் தொடங்குகிறாள். எதை இழக்கக் கூடாதோ.. அதை இழந்தது மட்டுமல்ல.. அதற்கான அடையாளச் சின்னம் தன் வயிற்றில் வளருவதையும் அவள் புரிந்து கொண்டாள்.

வாழ்க்கையின் மிக மகிழ்ச்சியான தருணங்களாக அவனைக் காதலித்ததும், நெருங்கி உறவாடியதும்.. இவை தன் இளமையா? இயலாத்தனமா? அவளுக்குப் புரியவில்லை. ஆயினும் அவளால் தடுக்க முடியாததாகவும், தவிர்க்க முடியாததாகவும் அந்தப் பொழுதுகள் இருந்ததை அவளால் மறக்க முடியாமல், அவை கனவுகள் போல.. இன்று மறைக்க முடியாமலும் போய் விட்டது.

அவனது காதலில் அவளுக்கு எதுவித சந்தேகமும் இருக்கவில்லை. அவனில் ஏற்பட்ட மாற்றங்களும், அவன் அவள் மீது காட்டிய பரிவும் வெறும் உடல் சுகத்துக்காக மட்டுமல்ல என்பதைச் சந்தேகமில்லாமல் அவளால் ஏற்றுக் கொள்ள முடிந்தது. அதன் விளைவுதான் அவளது மனப்பூர்வமான சம்மதத்துடன் அரங்கேறிய அன்னியோன்யம். வாழ்க்கை வாழ்வதற்கு.. பேசப்படுவதற்கல்ல. இந்தக் கணப்பொழுதுதான் உண்மை. இந்தச் சந்தோஷத்தை விட்டு விட அவள் தயாராகும் மனோ நிலையில் அன்று இருக்கவில்லை. ஆனால் இன்று தான் இருக்கும் நிலையில்.. இப்போது அவளுக்குள் ஒரு கலக்கம். என்ன செய்வதென்று தெரியாத தவிப்பு! இவளது தவிப்பை அவன் புரிந்து கொண்டான். நீ ஒன்றுக்கும் பயப்படாதே! நான் இருக்கிறேன் என்று ஆறுதல்ப்படுத்தினான்.

காந்தர்வ மணம் புரிந்த கணவன் மனைவியாக அவர்கள் வாழ்ந்து விட்டார்கள். தன் வாரிசு ஒன்று வளர்வது தெரிந்தவுடன் அவன் இரட்டிப்பு மகிழ்ச்சியில் அவளைக் கட்டியணைத்து, தாயிடம் கூட்டிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று. நடந்தவற்றை எல்லாம் ஒன்றும் விடாமல் ஒளிவு மறைவின்றிச் சொன்னான். தாயின் சம்மதத்தைப் பெற வேண்டுமென்ற ஒரே நம்பிக்கை அவனுக்குத் துளிர் விட்டது.

தாய் சம்மதித்து என்ன? சகோதரர்கள் இது ஒரு போதும் நடக்காது. அவளை மதம் மாற்றுவதற்கு அவர்கள் மனம் மாறவில்லை. நாட்டின் சட்டம், மதரீதியான கொள்கை, கோட்பாடு, பலம், செல்வாக்கு, அனுபவம் யாவற்றையும் பயன்படுத்திக் கொண்டார்கள். மதம் மாறுவது, குழந்தையைப் பொறுப்பேற்பது, அவளைத் தொடர்ந்து சவூதியில் இருக்க விடுவது போன்ற அவனுடைய எந்த நினைப்புக்கும் இடமில்லை.

வேலைக்காரியாக வந்தவளை வீட்டுக்காரியாக்கும் முயற்சியில் ஒரு கோடரிக்காம்பாய் நீ இருப்பதை நாம் ஒரு போதும் சம்மதிக்க மாட்டோம். நாங்களும் இந்தச் சமூகத்தில் எத்தனை பேருக்கு பதில் அளிப்பது? ஊரோடு பகைக்க முடியாது.

விளைவு உடனடியாகத் தேவகி தன் ஊருக்குப் போய்விட வேண்டும். வெளியே தெரிந்தால் அவளுக்குப் பல கஷ்டங்கள், தண்டனைகள் கிடைக்கும் என்ற விடயம் அவனுக்குக் கவலையளித்தது.

அவளை அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்து விடலாம். அந்த நிலைமையில் அவளை அனுப்பி வைப்பது தான் உசிதமானது எனத் தாயையும், தம்பியையும் சம்மதிக்கச் செய்து, தேவகி கைநிறையக் காசுடனும், தாய்மை என்ற உடற்தகுதியுடனும் தாய் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

தேவகியின் வருகைக்காகச் சந்தோசப்படுவதா? அவள் கொண்டு வந்த பணத்துக்காகக் குதூகலப்படுவதா? அவளின் கோலத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து துயரப்படுவதா? இந்த வயதான காலத்தில் ஏன் எங்களுக்கு இப்படியான நிலை..! உறவுகளின் தூற்றல்கள். அயலவர்களின் குத்தல்கள். நக்கல்கள். நையாண்டிகள்.. உலை வாயாய்..

இறப்பு நடந்தால்தான் இழவு வீடா..? இழக்கக் கூடாததை இழந்து. அடையாளச் சின்னத்துடன் வந்தாலும் இழவு தானே..பிறந்த குழந்தையின் ஆண் என்பதில் பேருவகையா..? சுகப் பிரசவம் என்பதால் ஆறுதலா..? எல்லாம் தலைகீழாய்ப் போய் விட்டது.

இப்போது பல விஷயங்கள் தலைகீழாய்த் தானே.. திருமணம் இல்லாமல் குழந்தை.. தந்தை பெயர் தெரியாமல் குழந்தை.வாயாடியாக. பிடிவாதக்காரியாக இருந்த தேவகி இப்போது பெட்டிப்பாம்பாக..

ஆஸ்பத்திரியில் தந்தை பெயர் குறிப்பிட முடியாத நிலையில் தேவகியின் தந்தையே பாதுகாவலர் என்று பெயர் பதிந்து... அருண்.. முன்பள்ளி.. பாடசாலை.. என வளர்ந்து விட்டான்.

இன்று சில பிள்ளைகள் அம்மா என்- அப்பா எங்கே? என்று கேட்டால்.. எத்தனை விடைகளைக் கொடுக்க வேண்டிய நிலை.. அருணுக்கு யாரைக் காட்டுவது? சிறுவயதிலிருந்தே நச்சரித்துக் கொண்டேயிருப்பான். அப்பா எங்கே..? என்று. விடை கிடைக்காத கேள்விகளைக் கேட்டு.. அவன் கேட்கும் போதெல்லாம் தேவகியின் அழுகை அவனையும் அழ வைத்து. **"அம்மா இனிமேல் நான்அப்படிக் கேட்க மாட் டேன்"**- எனச் சொல்லி அதனை மறந்து இருந்தான்.

இருபது வருடங்களாகக் கொஞ்சம் அமைதியாகவே வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. யாருடைய உபயமோ.. இன்று வந்து. **"நான் இனிமேல் இங்கே இருக்க மாட்டேன்"** - என்று மூர்க்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"உன்னுடைய எந்த உறவும் எனக்கு வேண்டாம்"**– என எடுத்தெறிந்து பேசுகிறான். **"ஊரில் என்னால் வாழ முடியாமல் செய்து விட்டு"**– என்று கூறிக் கொண்டு. **"ஊரை விட்டுப் போக வேண்டும்"**– என்று பிடிவாதம் பிடிக்கும் போது என்ன செய்ய முடியும் என்பது தேவகிக்குப் புரியவில்லை.

அச்சகச் செலவுகள் அதிகரிப்புக் காரணமாக உங்கள் அபிமான **"தென்றல் சஞ்சிகை"**– யின் விலை ரூபாய் 200.00 ஆகவும், ஆண்டுச் சந்தாப்பணம் ரூபாய் 900.00 ஆகவும் அதிகரிக்கப்படுகின்றது. இந்நிலையில் உங்கள் ஆதரவினைத் **"தென்றல்"**–க்குத் தொடர்ந்தும் வழங்குமாறுதயவாய் வேண்டிக் கொள்கின்றோம்.

- ஆசிரியர் -

வாசகர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்களிடமிருந்து தரமான கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

–கவிதை–

# ஒண்ணுமில்லை!



- கவிஞர் எழுகவி ஜெலில் -

வானம் கூட வெளிக்குதில்ல
வயிறும் நெறையுதில்ல
காதும் ரொம்ப கேக்குதில்ல
கண்ணும் வெளங்குதில்ல!
ஓடி ஓடி உழைச்சதுதான்
ஒண்ணும் விளங்கயில்ல
காடு போகும் நேரத்திலும்
கஷ்டம் தொலையிதில்ல!
உருப்படியாத் தின்னயில்ல
ஒடம்பில் பெலனுமில்ல
காசு ஏதும் வரவுமில்ல
கையில் பொருளுமில்ல!
ஆடிப்பாடி அன்றிருந்தோம்
அலுப்பு ஏதுமில்லை
கூடி நிக்கக்கூட இந்தக்
குவலயத்தில் எடமுமில்ல!
தேடிக்கீடி வைக்கயில்ல
தேவல்லாத சொத்துமில்ல
மக்கள் மீது பகையுமில்ல
மனவருத்தம் ஒண்ணுமில்ல!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்றிதழ்கள் – மாறுபட்ட வாசிப்பு!

– பேராசிரியர் சபா.ஜெயராசா –

இதழியல் வளர்ச்சியில் சிற்றிதழ்களே முதலில் தோற்றம் பெற்றன. எழுத்தறிவு வளர்ச்சியும், அச்சுப் பொறியின் முன்னேற்றங்களும், தொடர்பாடலின் வர்த்தக மயப்பாடும் வர்த்தக மயப்பட்ட பெரும் இதழ்களைத் தோற்றுவித்தன. அதேவேளை அறிவின் பன்முகப்பாடும், கருத்து வடிவங்களின் பன்முகச் செறிவும் பல தளங்களைக் கொண்ட வாசிப்பின் முகிழ்ப்பும் சிற்றிதழ்களின் தேவையையும், பெருக்கத்தையும் பல நிலைகளிலே தூண்டிய வண்ணமுள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிவு வளர்ச்சியோடிணைந்த சமூக நிகழ்ச்சி **"இதழ் எழுகுழாத்தைத்"**– (Journal Elite) தோற்றுவித்தது. அதாவது இதழ்களைத் தோற்றுவித்தோர் அவற்றுக்குரிய ஆக்கங்களை எழுதியோர்- அவற்றின் வழியாகக் கருத்துக்களையும், அழகியல் வடிவங்களையும் கையளித்தோர் **"இதழ் எழுகுலத்தார்"**- ஆயினர். சிற்றிதழ்களை அடியொற்றியே **"இதழ் எழுகுழாத்தினர்"**– தோற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கலை, இலக்கியங்களிலே நவீனத்துவம் எளிர்ச்சி கொள்வதற்கும், பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதற்கும் சிற்றிதழ்கள் தளம் அமைத்தன. உலகின் புகழ் பெற்ற எழுத்தாளர்கள் சிற்றிதழ்கள் வழியாக முகிழ்ந்தெழுந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ல்ஸ் டிக்கின்ஸ், கூல்றிச், கிப்ளிங், மாக்ருவைன், ஏர்னஸ்ட், ஹெமிங்வே, ரொபேட், கிரோவ்ஸ், ஹக்ஸ்ஸி.. என்றவாறு அந்தப் பட்டியல் நீண்டு செல்கின்றது. அவ்வாறான நிலைமைகள் தமிழ் இலக்கிய மரபிலும் காணப்படுதல் குறிப்பிடத்தக்கது. பெரும் எழுத்தாளர்கள் சிற்றிதழ்கள் வழியாகவே மேலெழுந்தனர். இதழ்களின் வளர்ச்சியை அடியொற்றி நிகழ்ந்த ஒரு செயற்பாட்டை ஆங்கிலத் திறனாய்வாளர் **"Jornalese"**- என்று குறிப்பிடுவர். அதனை **"இதழ் சார்ந்த மலின மொழி"**– என்று குறிப்பிடலாம்.

இதழ் சார்ந்த மலின மொழியில் ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்ட மலினமான மொழித் தொடர்கள், வாய்ப்பாட்டு வடிவிலான பழகிச் சலித்த வசனங்கள், அவற்றை அடியொற்றிய நடைக் கோலம் முதலானவை வளரத் தொடங்கின. மலின மொழியுடன் இழுபட்டுச் சென்ற இதழ்களும் உண்டு. விடுபட்டு நிமிர்ந்த இதழ்களும் உண்டு. விடுபட்டவை தனித்துவமான இதழ்களாக மேலெழுந்தன.

ஐரோப்பாவில் வளர்ச்சி பெறத் தொடங்கிய நவீனத்துவவாதம் இருபதாம் நூற்றாண்டில் அதன் உச்ச நிலைகளை எட்டியது. நவீனத்துவம் என்பது நொய்மையான ஓர் எண்ணக்கருவாக இருத்தல் ஒரு புறமிருக்க, கலை, இலக்கியங்களிலே புதிய வாதங்களின் உருவாக்கத்தோடு அது தொடர்புபட்டிருந்தது. கட்டுமான வாதம், டாடா இசம், இருத்தல் வாதம், உளவெளிப்பாட்டு வாதம், உளப்பதிவு வாதம், படிமவாதம், புதிய மானிட வாதம், குறியீட்டு வாதம், மாயவித்தை, நடப்பியல், கட்டற்ற கவிதை, எதிர் நாவல் போன்ற பல்வேறு கருத்தாக்கங்களுடன் நவீனத்துவம் தொடர்புபட்டுள்ளது. அத்தகைய வாதங்களை உருவாக்குவதிலும் சிற்றிதழ்களின் பங்கு குறிப் பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக இதழ்களின் எழுச்சி **"பணநாவல்"**– (**"Money novel"**) என்ற வடிவத்தைத் தோற்றுவித்தது. பணநாவல்- வியாபார நாவல் என்றும் ஆங்கில மரபில் அழைக்கப்பட்டது. பணநோக்கத்தோடு நாவல் மற்றும் சிறுகதை எழுதுவோரை வர்த்தக இதழ்கள் தோற்றுவித்தன. காவியப் பண்புகள், உணர்ச்சிக் கவிப்புகள், மலின இரசனை ஊட்டல், எதிர்பார்ப்பு, ஆவலைத் தூண்டல் முதலியவற்றை உள்ளடக்கிய பணநாவல்களை வர்த்தக இதழ்கள் வெளியிடத் தொடங்கின. தமிழில் இந்த நுட்பங்களின் விரிவைக் கல்கியின் தொடர் கதைகளிலே காணலாம். இலக்கியச் சிற்றிதழ்கள் அந்தப் புதிய வளர்ச்சிக்கு முகங் கொடுக்க வேண்டியிருந்தமை உலக இலக்கியப் பரப்பிலே காணப்பட்ட ஒரு பொதுவான தோற்றப்பாடு எனலாம்.

இலக்கியச் சிற்றிதழ்களிலே காணப்படும் ஒரு சிறப்புப் பண்பு அதன் **"ஊடு நூலியற் பண்பு"** (**"Intertext uality)**- எனலாம். இதழ்கள் தமக்குரிய தனித்துவத்துடன் மேலெழுகின்றன- என்று கூறும் பொழுது அது அன்னியமயமாகிய விடுபட்ட தனித்துவம் அன்று **"ஊடுநூலியம்"**– என்ற எண்ணக்கருவை 1966 ஆம் ஆண்டிலே திறனாய்வாளர் ஜீலியாகிறிஸ்ரவா அறிமுகம் செய்தார். அந்த எண்ணக்கரு **"சிக்மன்ட் புறொய்ட்"**– உருவாக்கிய **"ஊடுதளமாற்றம்"**– (**"Transposition"**)- என்பதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

உள்ளத்தில் ஆழப்பதிந்துள்ள உணர்வுகளும், கருத்துக்களும் அவ்வாறே நேரடியாக வெளிவராது புதிய அல்லது மாறுபாடான குறியீட்டு வடிவங்களை எடுக்கின்றன. அவற்றின் அடிப்படை யாகத்தான் சிற்றிதழ்களுக்குரிய தனித்துவம் மேலெழுகின்றது. அவ்வாறு மேலெழும் தனித்துவத்துக்கு சிற்றிதழ் ஆசிரியர்களுக்குரிய கருத்தியல் மேலும் வளமூட்டுகின்றது. அரண் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் உலக நாடுகளுக்குரிய சிறப்பான ஒடுக்கு முறை வடிவங்களைக் கருத்து நிலையிலும், எழுச்சி நிலையிலும் நோக்கும் தனித்துவம் கொண்ட சிற்றிதழ்களின் கனதியான பணி ஆய்வு நிலையில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. அத்தகைய சிற்றிதழ்கள் சுமை தாங்கிகளாகவும், கருத்து வீச்சுக்களைத் தனித்துவமாக வெளியீடு செய்பவையாகவும் அமைகின்றன. அவற்றின் செறிவுப் பரப்பு அதாவது வாசகர் பரப்பு சிறிதாக இருப்பினும் தாக்கம் பெரிதாக இருக்கும்.

மேலைநாட்டின் சிற்றிதழ்கள் தரம்மிக்கவையாக இருந்தாலும், அவற்றின் ஆயுள் குன்றியிருந்தமை ஒரு முரணுரையாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. தமிழ்ச் சிற்றிதழ்களுக்கும் இது பொதுவான விதியாகக் கொள்ளப்படுகின்றது. தரத்தைத் தொடர்ந்து தக்கவைக்க முடியாத ஒற்றைப் பரிணாம நேர் கோட்டு இயக்கம், ஒரே அச்சில் வார்த்தெடுத்தது போன்ற மாறுபாடில்லாப் புனைவுகள் முதலியவற்றால் வாய்ப்பாடு நிலைக்குச் சிற்றிதழ்கள் மாறும் பொழுது முன்னைய தரச் சிறப்பு இழக்கப்படுகின்றது.

அவற்றின் வாழ்க்கை நீட்சி குறைவடைந்த நிலையானது சமூக நிரலை அடியொற்றியும் விளக்கப்படுதல் உண்டு. பெரும்பாலும் சிற்றிதழ்கள் மத்தியதர வகுப்பினரது இலட்சிய எழுச்சியுடன் தொடர்புடையவை. தன்னல ஓங்கல், தம்மை மையப்படுத்தும் மட்டுப்பாடுடைய புலக்காட்சி, வர்த்தக நிலை சாராத ஒடுங்கிய தரிசனம், சந்தர்ப்பங்களின் சுவைப்புக்கு உள்ளாதல் முதலிய பண்புகள் காலவோட்டத்தில் சிற்றிதழ்களில் காலநீட்சிக் குலைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

ஆங்கில மரபு மற்றும் தமிழ் மரபில் மட்டுமல்ல, பல்வேறு மொழி மற்றும் பண்பாட்டுச் சூழல்களிலும் அதே நிலைகள் தான் காணப்படுகின்றன. மத்தியதர வர்க்கத்தின் குணவியல்புகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியொற்றிய இலட்சியங்கள் வேகமான ஒளிர்ப்பையும், வீழ்ச்சியையும் கொண்டிருக்கும்.

சிற்றிதழ்களுக்கு மட்டுமன்றி, மத்தியதர வகுப்பினரின் இலட்சிய நிறுவனங்களுக்கும் அதே நிலை தான் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக பெரும் இலட்சிய உந்துதலுடன் கவியரசர் தாகூர் சாந்தி நிகேதனையும், விஸ்வபாரதியையும் நிறுவினார். பின்னர் அவற்றை நடாத்த முடியாத பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளானார்.

சிற்றிதழ்கள் நீடித்து நிலைக்க வேண்டியதில்லை- என நீட்சி மறுப்பாளர் குறிப்பிடுவர். எத்தகைய எண்ணத்தை அது நிறைவேற்ற வந்ததோ, அது நிறைவேற்றப்பட்டதும், அது தேவையற்றதாகி விடும் - என நீட்சி மறுப்பாளர் குறிப்பிடுவர். அந்தக் கருத்து பயன் கொள்ளாத அடிப்படையில் முன்வைக்கப்படுகின்றது. பின்நவீனத்துவ வாதிகளும் அந்தக் கருத்துக்குச் சார்பானவர்களாகக் காணப்படுகின்றனர். கருத்துக்கள் நித்தியமானவை அன்று எனவும், அவற்றின் முக்கியத்துவம் என்றும் நிலையானது அன்று எனவும் பின் நவீனத்துவம் வலியுறுத்துகின்றது.

இவ்வாறாகச் சிற்றிதழ்கள் கருத்து நிலையிலும், அமைப்பு நிலையிலும் பல்வேறு கருத்து வினைப்பாடுகளுக்கு இட்டுச் செல்கின்றன. எமது சூழலிற் சிற்றிதழ்கள் பற்றி நிகழ்த்தப்படும் ஆய்வுகள் பெருமளவிலே விவரண நிலைப்பட்டதாக (Discriptive) அமைந்து வருகின்றன. அந்நிலையில் வேறுபட்ட புலக்காட்சிகளை உருவாக்கும் ஆய்வு முறைகளைப் பிரயோகிக்க வேண்டிய தேவை மேலெழுகின்றது.

**தென்றலின் தொடர் வருகைக்கு உதவுங்கள்.**

**– ஆசிரியர் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பெரும் மகத்துவமே !!!

- ஜெயவதி நித்தியானந்தன், களுவாஞ்சிகுடி -

ஐம்பெரும் மகத்துவ
அதிசய முத்தென
ஆதியவன் எடுத்திட்ட
அறிவொளி வித்துக்களோ
பெண்மையின் கற்பதை
பெருமையாய் செப்பிட
சிலப்பதிகாரமும்
சிக்கெனப் பொருந்திட
ஆசையைத் துறந்து
அகமது மிளிர்ந்து
மாண்பாய் சிறந்திட
மணிமேகலையும்
சிறப்பெனக் கொண்ட
சிந்தாமணியும்
இலக்கியச் சுவையாம்
வளையாபதியும்
முத்தமிழது முன்தோன்றி
தொன்மையாய்த் திகழும்
குண்டலகேசியும்
காலத்தை வென்றிடும்
காப்பிய நூலாய்
கண்முன் இன்று
கறையற்று திகழுதே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-சித்திரக்கதை-

# புதிதாய்ப் பிறந்தாள்!

- கீதா ஸ்ரீராம், அபுதாபி -



மாளவிகா வசதியான வீட்டுப் பெண் என்பதால் கர்வம் கொஞ்சம் அதிகம் தான். ஆறாம் வகுப்பு மாணவிக்கு இத்தனை கர்வம் இருக்கக் கூடாது.

வீட்டில் வாசலில் கிட்டத்தட்ட ஏழு கார்கள் நின்று கொண்டிருக்கும். பள்ளிக்குச் செல்லும் பொழுது விதவிதமாய் ஒவ்வொரு கலர்க் காரில் ஏறிப் பள்ளிக்குச் செல்வது அவளுக்குப் பிடித்த விடயம். பள்ளிக்குள் கார் நுழையும் பொழுது அவளுடைய தோழிகள் அவளை வியப்பாகப் பார்க்கும் பொழுது கர்வம் மேலும் மேலும் தலைக்கு ஏறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிய உணவு, விதவிதமாய் வண்ண வண்ண, டிபன் பாக்ஸில் விதவிதமாய் உணவை எடுத்துச் சென்று அதை யாருக்கும் கொடுக்காமல், அவர்களை ஏங்க வைத்து, சாப்பிடுவது இவளுக்குக் கைவந்த கலை.

வழக்கம் போல் படிப்பில் அவளுக்கு அத்தனை நாட்டமில்லை. ஏதோ பொழுது போக்கிற்காகப் பள்ளிக் கூடத்திற்கு வந்து சென்று கொண்டிருந்தாள்.

அன்று அவளுக்குப் பிறந்த நாள்.. வழக்கம் போல் பெருமையாகப் பள்ளிக்கூடம் சென்று மாலையில் நடக்கவிருக்கும் பெரிய பிறந்தநாள் விழா பற்றித் தோழிகளிடம் கௌரவமாகவும், பெருமையாகவும் சொல்லி விட்டு- வெளியே வந்து தனக்கான காருக்காகக் காத்திருந்தாள்.

புதுமையாக- வண்ணமயமான ஒரு கார் வந்து நின்று, அவளைப் பார்த்து ஒருவர் **“அம்மா வீட்டிற்கு வாருங்கள் போகலாம்”**- என சொல்ல..

உன்னை முன்பு பார்த்ததில்லையே? புதிதாக இருக்கிறாயே? எனக் கேட்க..

அம்மா, இன்று காலைதான் நான் வேலைக்குச் சேர்ந்தேன். ஐயா, உங்கள் பிறந்த நாளுக்காகப் புதிதாக இந்தக் காரை வாங்கினார்கள். உங்களுக்குச் சர்ப்ரைசாக இருக்கட்டும் என்று சொன்னார்கள். ஆகவே வாருங்கள். இந்தக் காரில் வீட்டுக்குப் போய் இறங்கலாம்- என சொல்ல, இவளுக்கும் மீண்டும் கர்வம் தலைக்கேற அப்பா தனக்காகப் புதிதாக இந்தக் காரை வாங்கியிருக்கிறார்.. என்றபடி ஏறி அமர்ந்தாள்.

கார் வீட்டின் வழியால் செல்லாமல், வேறு வழியால் செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. நீ யார் என்று சொல்? எனக் கேட்க, அவன் வேகமாகக் காரை ஓட்ட, அவள்.. அவள்.. எப்படியோ காரைத் திறந்து வெளியே குதித்து விட்டாள். குதித்த வேகத்தில் மயக்கத்திற்குப் போய் விட்டாள்.

கண் விழித்துப் பார்த்தால், ஒரே இருட்டு. கொஞ்சம் வெளிச்சத்தில் இவளைப் போலவே ஒரு சிறுமி பாவாடை சட்டை அணிந்து கொண்டு, கல் அடுப்பில் ஏதோ ஒரு பாத்திரத்தை வைத்து சமைத்துக் கொண்டிருந்தாள்.

அருகிலே சில புத்தகங்கள் இறைந்து கிடந்தன. இவை புத்தகம், பாடப் புத்தகம். அவை ஏற்கனவே உபயோகப்படுத்தியதால் கொஞ்சம் கிழிந்தும் காணப்பட்டது. மலங்க மலங்க கண்ணைத் திறந்து பார்க்க..

அந்தப் பெண் ஓடி வந்து, கண்ண முடிச்சிட்டியா..! இரு.. இரு.. உனக்கு தண்ணி கொண்டு வாரேன். பசிக்கும்.. சாதம் வெந்தவுடன் உனக்கு உப்புப் போட்டு, தாரேன். என் கிட்ட ஒன்னும் இல்லை எனச். சொல்ல, நீ யார் எனக் கேட்க..?

.. நான் அனாதை. என்னை வளர்த்த பாட்டியும் ஒரு வருடத்திற்கு முன்பு இறந்து போய் விட் டார்கள். ரோட்டில் கிடக்கும் குப்பைகளைப் பொறுக்கி வந்து அவற்றை விற்று அதில் வரும் காசில் ஏதோ குடிசையில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எனக்குப் படிப்பு ரொம்பப் பிடிக்கும். பாட்டி இருக்கும் போது பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருந்தேன். இப்போது படிக்க முடியாது இல்லையா? அதனால்தான் யாராவது தூக்கிப் போட்ட பழைய புத்தகங்களை எடுத்து வந்து அவ்வப்போது- பழைய பென்சில், பேனா இவற்றை வைத்து ஏதேனும் எழுதிக் கொண்டே இருப்பேன். எனச் சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய அத்தனை கர்வமும் ஒரு கணத்தில் அடங்கிப் போய் விட்டது.

நான் எப்படி இங்கு வந்தேன் என்று கேட்க.. ஒரு காரில் இருந்து கீழே விழுந்தாய்.. அப்பொழுது அந்தக் கார் வேகமாகப் போய் விட்டது. உன்னைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

நான் தான் தூக்கி வந்து, இங்கு படுக்க வைத்தேன்.

நீ யார்? என்ன ஆச்சு? எனக் கேட்க..

இவளுக்கு அத்தனையும் புரிந்து விட்டது.

தன்னைக் கடத்தி வந்தவன், தான் கீழே குதித்தவுடன் பயந்து போய் விட்டான். நடந்ததைச் சொன்னாள்.

எங்க அப்பா, அம்மாவுக்குத் தகவல் சொல்லணும் எனச் சொல்ல.. கவலைப்படாதே.. **"இதைச் சாப்பிட்டு விட்டு, தூங்கு. காலையில நான் உன்னைக் கூட்டிட்டுப் போறேன். எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் கிட்டப் போய் போன் பண்ணி.. உங்க வீட்டுக்குத் தகவல் சொல்லலாம்.."**– எனச் சொல்ல..

இத்தனை துன்பத்திலும் படிக்கும் அந்தப் பெண்ணைப் பார்க்க.. ஏழ்மை எத்தனை கொடியது என்பதை உணர்ந்தவளாய்..

**"பிறந்தநாள்"**

அன்பு புதுப் பெண்ணாக மாறி,

**"நீ எங்க வீட்டுக்கு வந்துவிடு.. நான் உன்னைப் படிக்க வைக்கிறேன். எங்க அப்பாகிட்டச் சொல்லி என்று சொல்லியபடி.."**–அவள் கொடுத்த அந்த உப்புப் போட்ட சாதத்தைத் தேவாமிர்தமாய் சாப்பிடத் தொடங்கினாள் மாளவிகா.

*(யாவும் கற்பனை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கவிதை -

# இறைவனை வேண்டுவோம்!!!

– கவிஞர் மருதூர் ஜமால்தீன், ஏறாவூர் –

தொற்றிய கொரோனா ஒட்டிய பொழுதாய்
துவழும் மனமும் கணமும் நினைவில்
வற்றா பற்றி அற்றா முற்றிட
மக்கள் வாழ்வு கழிகிறது
மனதில் கவலை தொடர்கிறது!
கொடைகள் தடைகள் கடைகள் மூடி
கொடுப்போர் எடுப்பாய் தடுப்பாய் உலவி
அடைந்தும் கிடையா வுடைந்து மக்கள்
உழைப்பும் போதா அலைகின்றார்
உதவும் பாதை நாடுகிறார்!
உறவு துறவு மறவு பிரிவாய்
உணவு துணைவு இணைவுயில்லா
நோயில் பாயில் வாயில் கவலையால்
நொந்தோரதிகம் வாடுகிறார்
நிலைமை நீங்க ஏங்குகிறார்!
எத்தனை காலம் இத்துயர் நோயாம்
ஏக்கம் தேக்கம் ஊக்கம் ஒடுங்கி
நித்தம் மக்களின் கேள்வியே நெஞ்சில்
விடியும் பாதை தேடுகிறார்
வினைகள் நீங்க வேண்டுகிறார்!
இனியும் துணிவாய் அணியாய் இணைந்து
இறையை நெருங்கி முறையாய் வாழ்ந்து
பொறுமை நேர்மை வாய்மை ஓர்மையாய்
வாழும் வழிக்கு விரைவோமே
வல்லோனுதவி பெறுவோமே..!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கவிதை-

# ஆட்டங்கள் அடங்கியதோ..!!!

- கவிதாயினி இராணி பௌசியா -

தலை கால் புரியாது தரையிலே நடந்து
அறம் புறம் தெரியாது ஆடிப்பாடி மகிழ்ந்து
மனித மாண்பை மரணிக்கத் துணிந்து
மமதையிலே மதியழந்து கர்வம் கொண்டாயே
கோடான கோடிப் பணம் கொட்டியே கிடக்க
கட்டிய மாடி மனை கவர்ச்சியாய் மினுங்க..
கைப்பிடித்த மனைவியும் கண்கலங்கித் துடிக்க
காலனாக வந்தானே கொரோனாவெனும் அரக்கன்
வாசலில் சொந்த வண்டி வகைவகையாய் நிற்க
வரவழைத்து அரச நோயாளர் வண்டியிலே பயணம்
சொகுசு மெத்தையும் சுகமும் கிடையாது
பிராணவாயு போதாமல் பூதவுடல் மடிய
போடியார் பட்டமோ போனதுமே பறந்து
பொடுபோக்குக் கணக்கனோ முதலாளி ஆனான்
பட்டம் பதவியெல்லாம் பாரிலே புதைய
மிச்சமான குடும்பமோ வீட்டோட முடங்க
ஆட்டங்கள் அடங்கியதோ
ஆட்டுவிக்கும் ஆண்டவனால்..!!!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிறுகதை -

# சபலப்பன்றி!

– நிலா தமிழின்தாசன், நிலாவெளி –



ஒரு சில வாரங்கள் தானிருக்கும் சுப்பர்ர வீட்டில் அந்தக் குடும்பத்தினர் வந்து குடியேறியமர்ந்து. தந்தை- தாய், இரண்டு பெண் பிள்ளைகள் என மொத்தம் நான்கு பேர் கொண்ட கட்டு மட்டான குடும்பம் அது.

தகப்பனுக்கு ஐம்பதைத் தாண்டிய வயது. நோய்வாய்ப்பட்டதைப் போன்ற மெலிந்த உடல்வாகு. கச்சேரியில் எழுதுவினைஞராகப் பணிபுரிகின்றார். தாய்க்கு நாற்பதைத் தொட்ட வயது. நல்ல செழுமையான சிவந்த. உயர்ந்த எடுப்பான இளமை மாறாத உடற்கட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் இருவரும் முறையே பதினெட்டு, பதினாறு வயது பருவ எழிலுக்குப் பஞ்சமில்லாத உருவங்கள். கல்வி கற்கின்றனர். தந்தையார் காலை ஏழு மணிக்குப் புறப்பட்டால், மாலை ஐந்து மணிக்குப் பின்னர் தான் வீடு திரும்புவார். பிள்ளைகள் இருவரும் காலை பாடசாலை புறப்பட்டு, பிற்பகல் இரண்டு மணிக்கு வந்து, அவசர அவசரமாகச் சாப்பிட்டு விட்டு, உடை மாற்றிப் புறப்பட்டால், மாலையாகித்தான் ரியூசன் முடித்து வீடு வந்து சேருவர்.

தாய் தனது பிரதான பணியான சமையல் பணியை முடித்து விட்டுக் குளித்துத் தோய்க்க வேண்டிய துணிமணிகளைத் தோய்த்துப் பாத்திரங்கள் கழுவுவது போன்ற ஏனைய வேலைகளையும் முடித்து, உணவருந்தினால் கணவர், பிள்ளைகள் வீடு வரும்வரை **"பிறிதான்".**– பத்தி ரிகை, நாவல்கள் வாசிப்பதும், ரீவியுடன் கொஞ்ச நேரம் இணைந்திருப்பதுமாகப் பொழுதைப் போக்குவார்.

அக்கம் பக்கத்து ஆட்கள் இன்னும் நெருக்கமாகவில்லை. அதனால் பேச்சுத் துணைக்கு யாருமில்லை அவருக்கு.

சுப்பருக்கு ஐந்து வீடுகள் சொந்தம். அவற்றில் மேற்படி வீட்டுடன் நான்கு வீடுகளையும் வாடகைக்கு விட்டு, மாதா மாதம் இருபதாயிரத்துக்கு மேல் சம்பாதிப்பார். உத்தியோகம், விவசாயம், மற்றைய வருமானங்கள் வேறு.

மூத்தது இரண்டும் பெண் பிள்ளைகள். இருவரையும் கனடா மாப்பிள்ளைகளுக்குத் திருமணஞ் செய்து கொடுத்து, அனுப்பி விட்டார். வீட்டில் அவரும் மனைவி இராஜேஸ்வரியும், மகன் சுந்தரேசனும் தான்.

சுந்தரேசன் படிப்பில் அவ்வளவு பிரகாசிக்கவில்லை. க. பொ. த (உயர்தரம்) வரை பயணித்து விட்டு நிறுத்திக் கொண்டான். வீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்று சொல்ல எதுவுமில்லை. ஜாலியாகப் பொழுதைக் கழிக்க எவ்விதத் தடையுமேயில்லை அவனுக்கு.

படிப்பில் கவனமெடுக்கும்படி ஒரு நாள் சித்திரவேலாயுதன் மாஸ்டர் கண்டித்த போது, **"படிச்சுக் கிழிச்சுப் போட்டுத்தானே காசிப்பிள்ளையர் லான் சர்கார் ஓடுகுறார்?"**– என்று வாத்தியாரைக் கேட்ட மாணவன்தான் சுந்தரேசன்.

சுந்தரேசன் பொழுது போக்காகத் தனது வீட்டில் மாடப்புறா வளர்த்து வந்தான். காலை - மாலை வேளைகளில் அவற்றிற்கு உணவு கொடுப்பான். உணவுண்டு அவை களிப்பதைப் பார்த்து ரசிப் பான். இவன் இங்கே புறாக்களுக்கு உணவு ஊட்டுவதை எதிர் வீட்டில் ஒரு சோடிக் கண்கள் ஆர்வத்தோடு பார்த்து ரசிக்கும். எதேச்சையாகக் கண்டிருக்கிறான். ஆரம்பத்தில் அதைப் பெரிதாக எடுக்கவில்லை அவன். ஆனால்! ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேளையும்..! அதே பார்வை.. சுந்தரேசனுக்கு அடிவயிற்றில் பட்டாம்பூச்சி வட்டமடிப்பது போல ஒரு கிளுகிளுப்பு.. ஜிலு ஜிலுப்பு..! ஏற்கனவே அவன் கொஞ்சம் அனுபவசாலி. முன்னர் அதே வீட்டில் வாடகைக்கிருந்த மோகனா அன்ரிக்கு உதவிகள் செய்ததும், தனியாக உரையாடியதும், மோகனா அன்ரி அவனது முதுகில் தட்டிப் பேசியதும், மோவாயைத் தடவியதும், கன்னத்தைக் கிள்ளியதும்.. ஒரு நாள் மாலை வேளையில் தனியாக இருந்த போது, இவனைக் கட்டிப் பிடித்ததும்.. முத்தங்கள் பரிமாறியதும்.. பின்னர் கட்டில் சங்கமமாய் தொடர்ந்ததும்..!

அப்படி இருக்குமோ..? நினைக்க அவனுக்கு உடல் விறைப்பெடுத்தது. தனக்குச் சிறகு முளைத்து முகிற் கூட்டங்களுக்குள் பறப்பது போன்றும்.. தன் மீது யாரோ சில்லென்ற பனித்துளிகளை அள்ளி விசிறுவது போலவும் சிலிப்படைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்! இந்த அன்ரியின் பார்வையின் தீட்சண்யம் என்ர உடம்பைத் துளைத்துச் சல்லடை போடு வது போல இருக்கே என்று எண்ணியவனாகத் தனது கண்களால் அந்த மாதின் மேனிப் பரப் பில் மேய்ந்தான். மோகனா அன்ரியின் உயரமும், அந்த உடலின் ஏற்ற இறக்கங்களும் அலாதியானது எனச் சப்புக் கொட்டிக் கொண்டான்.

எப்படியாவது நாளைக் காலையில் அன்ரி தனியாக இருக்கும் போது போய்க் கதைக்க வேணுமென்று மனதுக்குள் எண்ணமிட்டான்.

மறுநாள் மனதுக்குள் திட்டமிட்டவாறே சுந்தரேசன், அன்ரியின் வீட்டுக்குச் சென்றான். குளித்த ஈரத் துணியை மார்புக்கு மேலே குறுக்காகக் கட்டியபடி, கொடியில் கழுவிய உடுப்புக்களை உலர் வதற்காக விரித்துப் போட்டுக் கொண்டிருந்தாள் அந்தப் பெண்.

அன்ரி..! என்ற அழைப்புக் கேட்டுச் சற்றுத் திடுக்கிட்ட பாவனையில் திரும்பிய போது, வீட்டுச் சொந்தக்காரரின் மகன் நிற்பதைக் கண்டதும் தன்னைச் சுதாகரித்தவளாய் வாங்கோ தம்பி என்று கூறி, அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

**அன்ரி..! என்ர புறாக்களில் ஒரு வெள்ளைப்புறா இஞ்சாலப் பக்கம் வந்தது. காணல்ல. அதுதான் பார்க்க வந்த நான்"**- என்று புழுகினான். வெள்ளைப் புறாவோ தம்பி..! அப்பிடி இஞ்சால எதை யுங் காணயில்ல. நிக்கிறீங்கள் வந்து இருங்கோ தம்பி. எனக்கும் உங்களோட கதைக்க வேணுமெண்டு கனநாளாய் விருப்பம்- என்று கூறியவளாள் உள்ளே போய் உடை மாற்றிக் கொண்டு வந்தாள். சுந்தரேசனுக்கு எதிரே அமர்ந்து கொண்டு அவனது முழு உருவத்திலும் தன் பார்வையைச் செலுத்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரேசன் இதை உணர்ந்து அந்தரேசனாகப் பறக்க ஆரம்பித்தான். சற்று நேரத்தில் **"இருங்கோ வாறன்"**- என்று எழுந்து சென்ற அந்தப் பெண் சுடச்சுடத் தேனீரும், பலகாரத் தட்டும் கொண்டு வந்து நீட்டினாள். வேண்டாம் அன்ரி, ஏன் சிரமம் உங்களுக்கு என்று பசப்பியவன், பலகாரமும் சாப்பிட்டு, தேனீரும் அருந்தினான்.

**"இதிலென்ன சிரமந் தம்பி! பிளாஸ்க்கில எந்த நேரமும் ரெடியாயிருக்கிறது. அதை ஊத்தித் தாறது பெரிய வேலையே.."**- என்று கூறியபடி, மீண்டும் அமர்ந்து கொண்டாள்.

திரும்பவும் அவனை உற்றுப் பார்த்தபடி, பலகாரம் சாப்பிடுவதை, தேனீர் குடிப்பதை - ஒவ்வொரு அசைவையும் கரிசினையுடன் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

சுந்தரேசன் இவற்றைக் கண்டும் காணாதவன் போல் மென்று சுவைத்துக் கொண்டிருந்தான்.

**"தம்பி, உங்கட பெயரென்ன..?"**

**"என்ர பேர் சுந்தரேசன் அன்ரி"**

**"சுந்தரேசன், சுந்தரேசன், சுந்தர்.. பெயரிலையும் பொருத்தம் தான்"**- என்று முணுமுணுத்தாள். இதைக் கவனித்த சுந்தரேசன், **"என்னன்ரி சொல்லுறீங்கள்"**- என்று கேட்டான்.

ம்.. ம்.. பெரு மூச்சு விட்டவாறு, எழுந்து உள்ளே சென்ற அன்ரி ஒரு போஸ்ட் காட் ஸ்சைஸ் புகைப்படத்தைக் கொண்டு வந்து,அவனிடம் நீட்டினாள். படத்தைப் பார்த்த அவன் திடுக்கிட்டான்! அப்படியே தன்னைப் புகைப்படம் பிடித்த மாதிரி இப்படியும் ஒரு உருவ ஒற்றுமையா? வியப்பு மேலிட..

**" அன்ரி இது "**

அவன் வார்த்தையை முடிக்கு முன்னரே **"ஓம் தம்பி இது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்னுடைய மகன் சுந்தர்..”**

ஆறு வருஷம் கடந்து விட்டது. ரியூசன் வகுப்புக்குப் போன பிள்ளை இன்று வரை காணவேயில்லை. தேடாத இடமுமில்லை. விசாரிக்காத பொலிஸ்டேசன். ஆமிமுகாமிலுமில்லை. ஒவ்வொரு நிமிசமும் அவற்ர நினைவும். ஏக்கமும்தான். இஞ்ச வந்து உம்மைக் கண்டதும். என்ர மகன் உலாவுற மாதிரி ஒரு ஆறுதல். என்ர மகள்மாரும் தங்கட அண்ணாவைக் காண்ற மாதிரி ஒரு மெல்லிய சந்தோசம் எண்டு சொல்லுவினம்..

அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே **“அவன்”**– எங்கோ தொலைந்திருந்தான்.

ஆம்..! சபலச் சகதிக்குள் பன்றியாய்ச் சிக்குண்டிருந்த அவனது உள்ளம் அதிலிருந்து விடுபட்டு. வாசம் நுகரும் வண்ணத்துப் பூச்சியாய் சிறகடித்தது.

**“அன்ரி! இனி என்னை சுந்தர் என்றே கூப்பிடுங்கோ..”**– என்றான்.

**“நீரும் என்னை அன்ரி என்று கூப்பிடுவதை விடுத்து அம்மா என்றே சொல்லுந் தம்பி..”**– என்றாள்.

**எழுத்தாளர்களே தென்றலின் தேடல் பகுதிக்கு தங்களைப் பற்றிய விபரங்களை புகைப்படத்துடன் அனுப்பி வையுங்கள்.**

**– ஆசிரியர் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கவிதை-

# நாகரீக கலாசாரம்!

– கிருபைராணி நிர்மலராஜ் –

விடியலை விரட்டி
விரைவாக எழும்பி
தேத்தண்ணி குடித்து
தேகமதைத் தேற்ற வைத்த
நாகரீகம் அன்று..
நாற்சந்திக் கடை சென்று
நாலுதாழ் கொடுத்து
நாவுக்குச் சுவையில்லா
குளிர் கோப்பி குடிக்கும்
கலாசாரம் இன்று..
ஆசையப்பா வீடு சென்று
அரைத்த மீன் குழம்பு
ஆசையம்மா தந்திடவே
ஆசையுடன் உண்டிட்ட
நாகரீகம் கடந்து..
அயல்ப் பக்கக் கடை தேடி
அறியாத உணவுண்டு
அன்றாடம் அவதியுறும்
நாகரீகம் இன்று..
கைவீசி நடைபோட்டு
மாமி மச்சாள் உறவு கூறி
மனம் விட்டுப் பேசி
மனம் மகிழ்ந்த காலம் மாறி
கைபேசித் திரையுடன்
கண்கவர் காட்சியுடன்
காலமதை வீணாக்கும்
ஆடவர் மங்கையர்..
நிறைந்திட்ட காலமிது..
மாமியார் வீடும்
மகிழ்ந்திட்ட முற்றமும்
புழுதிமண் வாசனையும்
புரண்டாடிய
விளையாட்டும்
ஆசையுடன் கேட்டாலும்
அருகிலும் வராது!
ஆற அமர நேரமில்லை
அழும் நிலை வந்தாலும்
ஆசைகள் மாறாது
கோடிமுறை உழைத்தும்
அனைத்துக்கும் முற்றுப்புள்ளி..
அறிவில்லாச் சமூகமும்
அரைகுறை கலாசார
நாகரீகமும் அடியோடு
போகும் வரை கைதூக்கி
போராடிக் காத்திடுவோம்!
நாம் தேடும் அந்த
நாகரீகக் கலாசாரத்தை..!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவின் விளிம்பில் சுறா!

- கீதா -

நாற்பத்து நான்கு கோடி ஆண்டுகளுக்கு மேலாக கடலில் வாழ்ந்து வரும் ஓர் உயிரினம் சுறாமீன். பதினாறாம் நூற்றாண்டு வரை சுறாமீனைக் கடல்நாய் என நினைத்து வந்தார்கள். கடல்வாழ் உயிரினங்களில் வேட்டையாடும் சமூகத்தைச் சேர்ந்தது இந்த மீன். சிறிய அளவிலிருந்து மாபெரும் அளவிலான இதன் தோற்றம் எல்லோரையும் பயமுறுத்தச் செய்வது.


ஐநூறுக்கும் மேற்பட்ட சுறா இன வகைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதில் சில இனங்களில் நூற்றுக்கும் குறைவான சுறாக்களே உள்ளது. உலகிலுள்ள அனைத்து கடல்களிலும் சுறா மீன்கள் வசிக்கின்றன. சுமார் 2000 மீற்றர் ஆழத்தில்தான் இவை இருக்கும். ஆச்சரியமாக எப்போதாவது தான் கடலின் மேற்பகுதிக்குச் சுறாக்கள் வரும். இப்படிப்பட்ட சுறாவும் அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.

மனிதனின் வணிகப் பேராசையே இதற்கு முதற் காரணம். தவிர, கடலில் கலக்கும் பிளாஸ்டிக் கழிவுகளாலும் சுறாமீன்களுக்குப் பெரிதும் பாதிப்பு ஏற்படுகிறது. சில கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாகச் சொல்லப்படுகின்ற டைனோசர்களை இப்போது திரைப்படங்களில் மட்டுமே பார்க்க முடிகிறது.

இதே மாதிரியான ஒரு நிலை சுறாவுக்கும் வரலாம். இன்னும் 100 வருடங்களுக்குப் பிறகு பிறக்கும் குழந்தைகள் சுறா மீனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புகைப்படம் அல்லது திரைப்படத்தில் மட்டுமே பார்க்க முடியும். அப்படியான ஓர் அவல நிலையில் சுறாக்கள் இருக்கின்றன.

உணவு, எண்ணெய், மருத்துவம் உட்பட பல்வேறு காரணங்களுக்காக வருடந்தோறும் பத்துக்கோடிச் சுறாக்கள் வேட்டையாடப்படுகின்றன. முக்கியமாகத் துடுப்புகளுக்காக மட்டுமே அதிகளவில் சுறாக்கள் கொல்லப்படுகின்றன. காரணம், ஆசிய நாடுகளில் சுறாத் துடுப்புக்கு ரொம்பவே பிரபலம். துடுப்பை மட்டுமே எடுத்து விட்டு, இறந்த சுறா மீனின் உடலைக் கடலில் போடும் அவலமும் அவ்வப்போது அரங்கேறுகிறது.

ஒரு சுறா குட்டி போட்டு, அது வளரக் கொஞ்சக் காலம் பிடிக்கும். அப்படி ஒரு சுறா வளர்வதற்குள் நூறு வளர்ந்த சுறாக்கள் மனிதர்களால் அழிக்கப்படுகின்றன. என்ன இருந்தாலும் சுறா மீன்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தேசத்திற்கும் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கிராமியக் கவிதை-

# உயிரைப் பறித்துப் போறவளே!!!

– செல்வராஜா சுதாகரன்–வயலூரான் –

அந்தி சாயும் நேரத்தில ஆத்தோரம் போறவளே
சொந்தமாய் என்னைச் சுமந்திட மாட்டாயோ
சிந்துபாடி யென்னையும் சீராட்ட வாராயோ
நொந்திடும் உள்ளத்தை நோவாமல் காராயோ!
கண்டாங்கிச் சேலைகட்டிக் காதோரம் முடியசைய
வண்டாடும் சூழலில வாசமலர் சூடிப்
பெண்பாவி போகையில பேதை மனம் வாடுதடி
பெண்டாட்டி ஆக்கிடப் பேராசை கூடுதடி!
கனவில வந்துமே கதிகலங்க வைக்கிறியே
மனதில உட்கார்ந்து மத்தாப்பாய் சிரிக்கிறியே
தனமேதும் வேணாண்டி தையலே நீ வந்தால்
சினமின்றி உன்னோடு சிறப்பாக வாழ்வேனே!
உயிரைப் பறித்துப் போறவளே உன்றன்
உறவைப் பேணவே உத்தமியே வாவேண்டி
அயிரைமீன் கொழும்பாக்கி அத்தானுக் கமுதூட்டி
வெயிலில நிழலாக விருப்போடு வாகண்ணே!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் கோபத்தால் பாதிக்கப்படும் நாம்..!!!

- து.சிந்துஜா -

**"ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு"**– என்று யாரும் சும்மா பேச்சுக்காகக் கூறவில்லை. அதுதான் உண்மையான விடயம். அதீத கோபம் ஒருவனை மூடனாக்கி விடுகின்றது. கட்டுப்படுத்த முடியாத கோபத்தினால் பல அசம்பாவிதங்கள் நாளுக்கு நாள், இடத்துக்கு இடம் அரங்கேறிக் கொண்டிருப்பதை எம்மால் காணக் கூடியதாக இருக்கின்றது.

கோபத்தினால் சுயநினைவை இழந்து, என்ன செய்கிறோம், ஏது செய்கிறோம்- எனத் தெரியாமல், தன்னையே தண்டித்துக் கொள்கின்றனர். அல்லது தன்னைச் சார்ந்தோரைத் தண்டிக்கின்றனர். சொந்தப் பெற்றோரைக் கொலை செய்யும் மகன்களின் கதையை அன்றாடம் ஊடகங்களின் வாயிலாகப் பார்த்துக் கொண்டும்- கேட்டுக் கொண்டும் தான் இருக்கின்றோம். கோழிச் சண்டைக்காக சொந்த அண்ணனைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்த தம்பியைப் பற்றி அறிந்துள்ளோம். கணவனுடன் ஏற்பட்ட சண்டையினால், வீட்டில் தற்கொலை செய்து கொள்ளும் எத்தனையோ பெண்களின் கதைகள் எமது செவிகளில் எட்டியுள்ளன.

ஆத்திரம் மிகுந்த தந்தையினால் கொலை செய்யப்பட்ட பிள்ளைகளின் கதையைத் தொலைக்காட்சிகளில் பார்த்திருப்போம். இவ்வாறே கூறிக் கொண்டே போகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எல்லாம் அதீத கோபத்தின் வெளிப்பாடாகத்தான் இருக்கின்றது. கோபம் ஒருவனைக் கொலை காரனாக ஆக்கி விடுகின்றது. யாருமற்ற அனாதையாக்கி விடுகின்றது. சமூக விரோதியாக மாற்றி விடுகின்றது. மற்றவர்களால் வெறுக்கப்படுகின்ற ஒருவராக உருவாக்கி விடுகின்றது. இவ்வாறு கோபம் எமது இயல்புத் தன்மையை மாற்றி, மற்றவர்கள் எம்மைக் கண்டாலே பத்தடி தூரம் தள்ளிப் போய் விடும்படி செய்து விடுகின்றது.

மனிதன் என்றால் அவனிடத்தில் கோப உணர்ச்சி இருப்பது இயல்பே. அந்தக் கோபத்தை அடக்கியாளத் தெரிந்தவன் தான் பெரிய திறமைசாலி. எடுத்ததற்கெல்லாம் கோபப்பட்டாலும் எம்மீது மற்றவர்களுக்குள்ள மதிப்புக் குறைய ஆரம்பித்து விடும். கோபம் வர எது காரணமாக இருந்தாலும், முடிந்தளவு பிரச்சினையைப் பேசித் தீர்வு காண வேண்டும். அதை விடுத்து ஆயுதம் ஏந்தப் போனால், ஏந்தியவனுக்குத்தான் நட்டம்.

கோபத்திலுள்ள நபருக்கு தான் யார்? தான் செய்வது என்ன?- என்று எதுவுமே தெரியாது. அதனால் கோபத்தை இயன்றளவு குறைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அமைதியான இடங்களுக்குச் செல்வது, குழந்தைகளுடன் நேரத்தைச் செலவிடுவது போன்ற செயற்பாடுகள் கோபத்திலிருந்து விடுபட உதவும்.

கேட்ட பொருள் உடனே கிடைக்காவிட்டால் கோபப்படுகின்றோம். பிடித்த விடயங்களுக்குப் பெற்றோர் தடை விதித்தால் கோபப்படுகின்றோம்.. இவ்வாறு கோபப்படும் நாம், அடுத்து அரை மணி நேரம் கழித்து யோசித்துப் பார்த்தால், நாம் கோப்பட்டதை நினைத்து நமக்கே சிரிப்பாக இருக்கும்.

அதுமாத்திரமின்றி, ஒருவன் கோபமாக இருக்கும் போதே அவன் உள்ளத்திலிருக்கும் எல்லாக் கசப்புக்களும் வெளியே வரும் என்று சொல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன வார்த்தைகளை மீண்டும் திருப்பிப் பெற முடியாது. அதனால் கோபத்தில் உதிர்க்கும் வார்த் தைகள் நிதானம் தவறாததாக இருக்க வேண்டும். அது எதிரில் இருப்பவரை எந்தளவுக்குப் பாதிக்கும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் கோபத்துக்கு ஆளானவரிடம் எத்தனை தடவை மன்னிப்புக் கேட்டாலும், அதில் எந்தப் பிரயோசனமும் இருக்கப் போவதில்லை.

பல குடும்பங்கள் இன்று பிரிந்து கிடக்கக் காரணமே இந்தக் கோபம்தான். எத்தனையோ தம்பதியர் ஐந்து நிமிடக் கோபத்துக்காக விவாகரத்து வாங்கி, ஒருவரை ஒருவர் பிரிந்து விடுகின்றனர். ஒரு நிமிடம் இந்தக் கோபத்தை வீசியெறிந்தோமானால், பல விபரீதங்களிலிருந்தும்- தவறான முடிவுகளிலிருந்தும் தப்பிக்கலாம்.

**“உடலை விட்டு உயிர் பிரிந்தால், மீண்டும் திரும்பாது”**– என்பது தெரிந்தும் அற்ப கோபத்துக்காக உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். கோபத்தில் எடுக்கும் எந்தவொரு முடிவும் சரியானதாக இருக்காது. அவ்வாறு செய்வதும் கோழைத்தனமான செயலாகும்.

எனவே கோபத்தைக் கட்டுப்படுத்தப் பழகுவோம். இல்லையெனில், உடலளவிலும்- மனதளவிலும் அதிகம் பாதிக்கப்படப் போவது நாமாகத்தான் இருப்போம்.

**புதிய வரவு பகுதிக்கு எழுத்தாளர்களால் வெளியிடப்படும் நூல்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றை தென்றலுக்கு அனுப்பி வையுங்கள்.**

**– ஆசிரியர் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றேன்!!!

- பாவேந்தல் பாலமுனை பாறூக் -

காலையில் வாழ்த்துகின்றேன்
களிப்புடன் வாழ்கவென்றே!
நாளிது நல்ல நாளாய்
நமக்கெல்லாம் மலர்கவென்றே!

தற்காப்பு முறைகள் பேணி
தன்நிலை காத்துக் கொண்டு
அச்சமே இன்றி வாழ
அன்புடன் வாழ்த்துகின்றேன்!

சுத்தமாய் இருந்து கொண்டு
தூரத்தைப் பேணிக் கொண்டு
கவசமும் அணிந்து கொண்டு
காரியம் ஆற்ற வேண்டும்!

பொது எதிரியை வீழ்த்த நல்ல
புத்தியோ டியங்க வேண்டும்
விதிகளை விளங்கிக் கொண்டு
விரைந்து நாம் செல்ல வேண்டும்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வரவு




நூல் :-ஐங்குறுநூறு
வரிசையில் பாலைவனம்

ஆசிரியர் :-ஜே.எஸ்.கே.
ஏ.ஏ.எச்.மௌலானா

வெளியீடு :-ஏகத்துவ மெய்ஞ்ஞான
சபை

இந்நூலில் ஆரம்பத்தில் பாடல் எழுதப்பட்டு, பின்னர் பொருள், சொல் கருத்து என்பன விரிவாக ஒவ்வொரு பாடல்களுக்கும் என வரையறை செய்யப்பட்டுள்ளது. இதனை இன்றைய சமூகத்தினர் விரும்பிப் படிப்பதற்காகவும், முற்காலத் தமிழ் எவ்வாறிருந்தது என்பதை அறிந்து கொள்வதற்காகவும் இலகு மொழி நடையில் முழுப் பிரசவமாக எமது கரங்களில் தவழ விட்டிருக்கிறார் ஆசிரியர்.

பன்மொழித் திறமை கொண்டவரான இவரின் கவித்துவ ஆற்றலும் எழுத்தாற்றலும் நூலுக்கு வலுசேர்க்கின்றன. நூலைப் படிக்கும் போது அவற்றினிடையே வர்ணப் படங்களும் இணைக்கப்பட்டுள்ளமையானது வாசகர்களைக் கவரும் செயற்பாடாகவே அமைந்துள்ளது.

ஆசிரியரின் எழுத்தாக்கல் பணிகள் தங்கு தடையின்றி தொடர்ந்திடத் **"தென்றலின்"**– இனிதான வாழ்த்துக்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– நீத்தார் நினைவு –

# எழுத்துப்பணி, படைப்பாற்றலால் இன்றும் எம்மிடையே வாழும் அமரர் அருள்செல்வநாயகம்!



– பழுவூரான் –

இவருடைய எழுத்துப்பணி, படைப் பாற்றல் விதந்து பேசத்தக்கது. இவர் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு குருமண்வெளியைச் சேர்ந்தவர். தனது படைப்புக்களை நாவல், சிறுகதை, கட்டுரை, கவிதை எனப் பல தளங்களில் எழுதி, அவற்றை வெளிக் கொணர்ந்தவர். அத்தோடு அத்தோடு விபுலானந்த அடிகளார் இந்தத் தமிழ் கூறும் நல்லுலகுக்கு அருளிய கலைப் பொக்கிசங்களைத் துருவித் துருவித் தேடித் தொகுத்து வெளியிட்ட பெருமை அன்னாரையே சாரும்.

இந்த வகையில் **"விபுலானந்த அடிகள்"(1954), "விபுலானந்த அமுதம்"-(1956), "விபுலானந்த கவிதை கள்- (1957), "விபுலானந்த வெள்ளம்"-(1961), "விபுலானந்த ஆராய்வு- (1963), "விபுலானந்த கவி மலர்-(1965), "விபுலானந்த வெள்ளம்"- (1967), "விபுலானந்த இன்பம்-(1973)..** என்று சுவாமி விபுலானந்தரின் மகத்தான ஆக்கங்களைத் தனித்து நின்று தொகுத்துப் பத்து நூல்களாக வெளியிட்டுள்ளார்.

இந்தப் பத்து நூல்களையும் ஒன்று சேர்த்து 2008 ஆம் ஆண்டு அன்னாரது மூத்த மகள் திருமதி ஜெயந்திமாலா குணசீலன் **"விபுலானந்த இலக்கியம்"**- எனும் பெரிய நூலாகத் தந்தார்.

இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய அமரர் அருள் செல்வநாயகத்திற்கு **"தென்றல்"**-தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் நெஞ்சம்

இலக்கிய உலகில் **"தென்றலின்"**– வரவு இலக்கிய நெஞ்சங்களால் விதந்துரைத்துப் பேசப்படுகின்றது. அதன் வளர்ச்சியைக் காணுகின்றேன். **"தென்றலின்"**– வரவு கிழக்கிலங்கைக்கு மட்டுமன்றி, சகல பிரதேசங்களுக்கும் விடிவெள்ளியாகப் பவனி வரும் என எதிர்பார்க்கிறேன். பரந்துபட்டு வாழும் கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதையிட்டு மகிழ்ச்சி. இவ்விதழ் சகல பிரதேசங்களையும் அரவணைக்கும் இதழாகப் பரணமிக்க அடியவளின் வாழ்த்துக்கள்.

அ. நர்மதா . மல்லாவி.

---

இதழ்கள் நன்றாக வெளிவந்துள்ளன. தென்றலின் ஐம்பதாவது அகவை இதழில் பதினேழு முத்தான கலைஞர்களின் விபரங்களை அருமையாக வெளிக் கொணர்ந்தமைக்குப் பாராட்டுக்கள்! அருமையான வாசிப்பனுபவம். அதன் விளைவே இக்கடிதம். ஈழத்தின் இன்றைய சிக்கலான காலகட்டத்தில் சஞ்சிகையொன்றினை நடாத்துவது எவ்வளவு பிராயத்தனம். என்னால் ஊகிக்க முடிகிறது. அதற்காக எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, தாங்களது முயற்சியையும் மனம் திறந்து பாராட்டுகிறேன்.

**"தென்றல்"**– தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களிலுள்ள பட்டி தொட்டியெல்லாம் சென்று தமிழின் சிறப்பை- பெருமையைப் பறைசாற்ற வேண்டும். நீ ஐம்பதாவது இதழை மட்டுமல்ல, பல நூறு இதழ்களை விரிக்க வேண்டும் என்பதே எனது பேரவா!

வை.சாரங்கன் . ஹற்றன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Online Learning மிக இலகுவானது...



## Onlineஇல் ஆங்கிலம் கற்பது ஏன் சிறந்தது?

- சக மாணவர்களைப் பற்றிய எண்ணமோ, வெட்கமோ இல்லை
- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனம்
- உயர்கல்விக்கான புதிய தொழில் நுட்பங்களை கற்றுக்கொள்ளும் வாய்ப்பு
- ஆசிரியருடன் நேருக்குநேர் கதைக்கும் வசதி
- பயணம் மற்றும் நேரவிரயம் இல்லை
- Self Disciplineஐ மேலும் விருத்தி செய்யும் வாய்ப்பு
- இலகுவானதும் வசதியானதும்
- Video மற்றும் Audio வசதிகளுடன் கூடிய வகுப்புகள்

AD/0006

## Headway School of Languages

12, Thamaraikerny Road, Arasady, Batticaloa

T: 065 492 4042 | 065 222 5612 | 070 334 4448 | 070 334 4445

www.headway.lk

துர்க்கா அச்சகம், மட்டக்களப்பு. 065 205 3060


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org